Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTU
CC NO. **71/2018**
**Depostitions of PW- 2 Witness for**

| | |
|---|---|
| Name | சிவனேஷ்வரன் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22th day of November 2023.

Signature of Witness.

22.11.2023

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சொக்கனாமுத்தூரில் குடியிருந்து வருகிறேன். AKR ரோடுபோடும் கான்ட்ராக்டரிடம் நான் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். தேதி நியாபகம் இல்லை. 2017 ம் வருடம் மார்ச் மாதம் கிருஷ்ணன்கோவில் அருகே துப்பாக்கி சுடும் தளத்திற்கு எதிரே ரோடு போடும் வேலையில் இருந்தோம். அப்போது அந்த இடத்திற்கு 100 மீட்டருக்கு முன்பு ஒரு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் போய் பார்க்கவில்லை. 3 நாட்கள் கழித்து அதே இடத்தில் ரோட்டிற்கு மண் அணைத்துக்கொண்டிருந்தோம்.

அப்போது 3 போலீசார் வந்து என்னிடம் விபத்து சம்மந்தமாக கேட்டார்கள். எனக்கு தெரியாது என்று சொன்னேன். எனது அட்ரஸ், போன் நம்பர் கேட்டார்கள். நான் கொடுத்தேன். அவ்வளவுதான் வேறு எதுவும் தெரியாது.

**<u>நீதிமன்ற கேள்வி–</u>**

பாலு என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. விபத்தினை நீங்கள் நேரில் பார்த்ததாக போலீசார் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. அது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால் நான் விபத்தினை பார்க்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.